# இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் சுயாதீனப் பொறிமுறை

ஜஸ்மின் சூக்கா

ஏப்பிரல் 2021

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

# விளக்க குறிப்பு

அண்மையில் அறிவிக்கப்பட்ட இலங்கைக்கான சுயாதீனப் பொறிமுறை பற்றி மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுக்கான ஒரு சுருக்கமான விளக்ககுறிப்பு இதுவாகும்.

46 ஆவது அமர்வில் 23 மார்ச் 2021 அன்று மனித உரிமைகள் சபையினால் ஐ நா தீர்மானம் A/HRC/46/L.1/Rev.1 நிறைவேற்றப்பட்ட பின்னர் இந்த சுயாதீனப் பொறிமுறை இடம்பெற்றுள்ளது. இந்த தீர்மானமாத்தில் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை ஊக்குவித்தல்' ஆகியவற்றுக்கு அழைப்புவிடுக்கப்பட்டது[1]. கடந்த கால குற்றங்களுக்கான நீதியை தேடும் பல்வேறு வகையான பொறுப்பு நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுககான ஐநா உயர் ஆணையாளரால் பெப்ரவரி 2021 இல் மனித உரிமைகள் சபைக்கு வழங்கப்பட்ட அறிக்கையில் இருந்து இது உருவாக்கப்பட்டது[2].

**<u>விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடர்வதற்கான முதன்மைப் பொறுப்பு</u>**

இலங்கை அரசானது கடந்த காலத்தில் இடம்பெற்ற குற்றங்களை உள்நாட்டில் விசாரித்து வழக்குத் தொடர்வதற்கான முதன்மையான பொறுப்பினைக் கொண்டிருக்கின்ற அதேவேளையில் அதனைச் செய்யத் தவறிவிட்டது என்பதனை 2021 தீர்மானம் ஏற்றுக் கொள்கிறது. இலங்கையானது இதனைச் செய்வதற்கான விருப்பத்தைக் கொண்டிருக்காமையே சர்வதேச சமூகமானது பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை கையிலெடுத்திருப்பதற்கான முக்கிய காரணமாகும். பொறுப்புக்கூறல் மற்றும் இடைக்கால நீதிக்கான உள்நாட்டு செயன்முறைகள் தோல்லியடைந்திருப்பதை இந்த தீர்மானம் அங்கீகரிப்பதாக உள்ளது.

## <u>ஒரு சுயாதீனப் பொறிமுறையை கொண்டிருப்பதன் முக்கியத்துவம் என்ன</u>

### i. ஒரு விரிவான கருத்தை உருவாக்குதல்

நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்கான ஒரு சர்வதேசக் குற்ற வழக்கினை உருவாக்குவதற்கு அடிக்கடி பரவலான அல்லது திட்டமிட்ட தாக்கதல்களுடன் தொடர்புபட்ட விரிவான கட்டமைப்பின் ஒரு பகுதியாக புரியப்பட்ட சிக்கலான குற்றங்கள் பற்றிய ஒரு ஆய்வு அவசியமானதாகும். வழமையாக தனிப்பட்ட நபர்களின் குற்றவியல் பொறுப்பினை நிரூபிப்பதற்கு குறிப்பிட்ட காலத்தில் மற்றும் இடத்தில் நடத்தை வடிவங்கள் பற்றிய மதிப்பீடும் அத்துடன் சிக்கலான வலையமைப்புகளில் முறையான மற்றும் முறைசாராத உறவுகளின் மதிப்பீடும் அவசியமாகிறது. பல சமூக அமைப்புக்கள் ஒரு குறிப்பிட்ட புவியியல் அல்லது ஆய்வுப் பகுதி சார்ந்த நிபுணத்துவத்தைக் கொண்டிருக்கும் அதேவேளையில் ஒரு பூரணமான வழக்குகோவையை உருவாக்குவதற்குத் தேவையான அனைத்து ஆதாரங்களையும் கொண்டிருப்பது சாத்தியமில்லை.

இலங்கைக்கான சுயாதீன பொறிமுறையின் முக்கியமான நன்மைகளில் ஒன்று என்னவெனில் அது நாட்டுக்கு உள்ளேயும் வெளியும் பல்வேறு தரப்புக்களிடமிருந்தும் ஆதாரங்களை சேகரிக்க கூடியதாக இருப்பதுடன் அத்துடன் தனிபட்ட நபரின் பொறுப்பு தொடர்புபட்ட மற்றும் மிகவும் மோசமான குற்றங்கள் பற்றிய ஒரு விரிவான கருத்தை உருவாக்க கூடியதாகவும் இருக்கும். குறிப்பிட்ட சிவில் சமூக அமைப்புக்களால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏனையவர்களால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களுடன் சேர்க்கும் போது அவை பொருத்தமானவையாக இருக்கலாம். ஆதாரங்களைச் சோதித்துப் பார்க்கும் திறனானது சுயாதீன பொறிமுறை தான் சேகரிக்கின்ற ஆதாரங்கள் பற்றிய நம்பகத்தன்மையை உறுதிசெய்து கொள்வதற்கு அதற்கு உதவும்.

### ii. ஆதாரங்களை சேமித்துவைத்தல்

இந்த சுயாதீனப் பொறிமுறையானது ஆதாரங்களை பாதுகாப்பான முறையில் பாதுகாத்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு பொருத்தமான சேமிப்பு மற்றும் முகாமைத்துவ முறையை வழங்ககூயதாக இருக்கும்.

### iii. பகுப்பாய்வு

இந்த சுயாதீனப் பொறிமுறையானது ஒரு டிஜிட்ல் ஆதார முகாமைத்துவமுறையையும், பெரும் எண்ணிக்கையான தரவுகளை ஒழுங்குபடுத்தி , பரிசோதித்துப் பார்த்து பகுப்பாய்வு செய்யும் சர்வதேச குற்றவியல் சட்ட நிபுணர்களையும் பயன்படுத்தி நிபுணர் பகுப்பாய்வினை மேற்கொள்ளும்.

---

[1] https://ap.ohchr.org/documents/sdpage_e.aspx?b=10&se=216&t=4

[2] https://www.ohchr.org/EN/NewsEvents/Pages/DisplayNews.aspx?NewsID=26695&LangID=E Link at bottom of page.

**iv. ஆற்றலைக் கட்டியெழுப்புதல்**
சிவில் சமூக அமைப்புக்களின் தொழிநுட்ப ஆற்றலைக் கட்டியெழுப்பக்கூடியதாகவும் அவர்களது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக்கூடியாகவும் இலங்கை மற்றும் வெளிநாடுகளில் உள்ள சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புக்களுடன் உறவினைக் கட்டியெழுப்புதல் இந்தப் பொறிமுறையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாக இருக்கும்.

**v. சர்வதேச கவனத்தைப் பேணுதல்**
இந்த சர்வதேசப் பொறிமுறையானது அடுத்த 12 மாதகாலப் பகுதியில் ஒழுங்கானமுறையில் மனித உரிமைகள் சபைக்கு அறிக்கை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த வகையில் சர்வதேச சமூகத்தின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை தொடர்ந்தும் இருக்கும்.

## இந்த தீர்மானத்தின் கணிசமான அதிகார வரம்பு

**பத்தி 6**
''இது பொறுப்புக்கூறலை முன்னேற்றும் நோக்கத்துடன், இலங்கையில் இடம்பெற்ற மனிதஉரிமை மீறல்கள் மற்றம் துஸ்பிரயோகங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய குற்றங்கள் என்பன தொடர்பான ஆதாரங்களை பாதுகாப்பது, பகுப்பாய்வு செய்வது என்பவற்றின் முக்கியத்துவதை ஏற்றுக்கொள்கிறது, இது தொடர்பில் தகவல்களையும் ஆதாரங்களையும் சேகரித்து , பகுப்பாய்வு செய்து பாதுகாப்பதற்கும், பாரிய மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் மோசமான மீறல்கள் என்பவற்றின் பொறுப்புக்கூறலுக்கான எதிர்காலத் திட்டங்களுக்கான சாத்தியமான மூலோபாயங்களைத் தயாரிப்பதற்கும், பாதிக்கப்பட்டோருக்கும் உயிர்பிழைத்தோருக்கும் ஆதரவாகக் குரல் கொடுப்பதற்கும், உரிய நியாயாதிக்கத்துடன் உறுப்பு நாடுகளில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கும், உயர் ஆணையாளரின் அலுவலகத்தின் ஆற்றலை அதிகரிப்பதற்கும் பலப்படுத்துவதற்கும் தீர்மானிக்கின்றது''.

**பத்தி 16**
''நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் ஆகியவற்றின் முன்னேற்றம் உட்பட, இலங்கையின் மனித உரிமை நிலைமை குறித்த அதனுடைய கண்காணிப்பையும், அறிக்கை மேற்கொள்வதையும் மேம்படுத்துமாறும், மனித உரிமைப்பேரவைக்கு இது அழைப்பு விடுத்ததுடன் , (நாற்பத்து ஒன்பதாவது அமர்வில் வாய்மூலமாக புதுப்பிப்பு அறிக்கையையும் அத்துடன் ( 49 ஆவது அமர்வில்) எழுத்துமூலமான புதுப்பிப்பு அறிக்கையும் சமர்ப்பிக்குமாறும், இது பொறுப்புக்கூறலை முன்னெடுத்துச் செல்வதற்கான மேலதிக தெரிவுகள் என்பவற்றை உள்ளடக்கிய விரிவான அறிக்கை ஒன்றை (51 ஆவது அமர்விலும்) சமர்ப்பிக்குமாறும் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஆணையாளரின் அலுவலகத்திடம் அழைப்புவிடுத்தது''.

## ஜநாவின் ஆணையிலான இலங்கைக்கான சுயாதீனப் பொறிமுறையின் முக்கிய அம்சங்கள்

- இந்த சுயாதீனப் பொறிமுறை என்பது ஒரு வழக்கறிஞர் அலுவலகமோ அல்லது நீதிமன்றமோ இல்லை
- அது குற்றவாளிகளை விசாரிப்பதுமில்லை அத்துடன் வழக்குதொடர்வதும் இல்லை
- இந்தப் பொறிமுறை இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச குற்றங்கள் பற்றிய ஆதாரங்கள் மற்றும் தகவல்களைச் சேகரிப்பதுடன் அது தேசிய , பிராந்திய அல்லது சர்வதேச நீதிமன்றுகள் அல்லது தீர்ப்பாயங்களில் எதிர்கால குற்றவியல் வழக்குகளுக்கு உதவுவதற்கான வழிகளை கண்டுபிடிப்பதற்கு அதனைப் பகுப்பாய்வு செய்யும். இந்த நீதிமன்றங்களும் தீர்ப்பாயங்களும் இந்தக் குற்றங்கள் மீதான சட்ட அதிகாரத்தைக் கொண்டதாக எதிர்காலத்தில் உருவாக்கப்படலாம்.

இந்த ஜநாவின் இலங்கைக்கான சுயாதீனப் பொறிமுறையானது சிரியாவிற்கான சுயாதீன விசாரணைப் பொறிமுறை மற்றும் அண்மைய மியான்மருக்கான பொறிமுறையின் அனுபவங்களை வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இவை தண்டனையிலிருந்து பாதுகாப்புடன் இழுபட்டுச் சென்ற நிலைமைகளுக்கு உறுப்புநாடுகள் பதிலளிப்பதற்கு உதாரணங்களாக உள்ளன அத்துடன் அங்கு சர்வதேச சட்டத்தின் கீழும் உள்நாட்டு ரீதியாகவும் குற்றங்களுக்கான குற்றவியல் பொறுப்புக்கூறலுக்கான வழி மட்டுப்படுத்தப்பட்டதாக உள்ளது. அது தற்போது கிடைக்ககூடிய ஆதாரங்களை தொலைந்துவிடாமல் பல்வேறு வட்டாரங்களில் இருந்து சேகரித்து , பகுப்பாய்வு செய்து பின்னர் பாதுகாப்பதை உறுதிசெய்யும் ஒரு இடைக்கால நடவடிக்கையை முன்மொழிகின்றது. அது நீதி மற்றும் பெறுப்புக்கூறலுக்கான பாதையின் முதற்படியாக உள்ளது.

**தற்காலிக ஆணை**

இந்தச் சந்தர்பத்தில் , இந்த தற்காலிக ஆணை என்பது இன்னமும் தெளிவற்றதாக உள்ளது – வேறு வார்த்தைகளில் சொன்னால், இந்தப் பொறிமுறையானது எவ்வளவு தூரத்திற்குப் பின்சென்று தகவல் சேகரிப்பை மேற்கொள்ளும் என்பது தெளிவற்றதாக உள்ளது.

**அது மூன்று பாரிய அக்கிரமங்கள் இடம்பெற்ற காலப்பகுதிகளை உள்ளடக்கிறதா?**

ஜேவிபி காலப் பகுதியில் பாரிய எண்ணிக்கைகளில் வலிந்து காணாமற்போதல் சம்பவங்கள் இடம்பெற்றதாக கணக்கிடப்படுகிறது. அதேநேரத்தில் முன்னைய காலப் பகுதிகள் பற்றிய சில தகவல்கள் இருக்கையில் இந்தப் பொறிமுறையானது அதில் என்ன உள்ளது என்பதைப் பார்ப்பது அவசியமாகும். இந்த சுயாதீனப் பொறிமுறையானது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவது பற்றியதாக உள்ளது அத்துடன் ஆதாரங்களை, தகவல்களை சேகரித்தல் வரலாற்று வில்லையின் ஒரு முக்கிய கூறாக உள்ள அதேவேளையில் குற்றஞ்செய்தவர்கள் இன்னமும் உயிருடன் இருப்பதால் அவர்களைப் பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்துவதை இன்னமும் சாத்தியமாக்குவதற்கு தகவல்களை சேகரித்தல் பற்றியதாகவும் அது இருக்கலாம்.

அதாவது ஏனைய நாடுகளில் குற்றவியல் நீதிமன்ற வழக்குகள், உள்நாட்டு குற்றவியல் நீதிமன்ற வழக்குகள் , கலப்பின நீதிமன்றங்கள், வெவ்வேறு நாடுகளிலுள்ள தடை அமைப்புகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் எப்போதாவது உருவாக்கப்பட்டால் இடைக்கால நீதி அமைப்புக்கள் ஆகிய பல்வேறுபட்ட பொறிப்புக்கூறல் பொறிமுறைகளுடன் இதுபோன்ற ஆதாரங்கள், தகவல்களை பகிர்ந்து கொள்ளமுடியுமா என்பதை இந்தப் பொறிமுறை அதனுடைய பரிந்துரைகளில் கருத்திற்கொள்வது அவசியமானதாக இருக்கும்,

**குற்றவாளிகளுக்கு எதிராக அதனால் வழக்குத்தொடர முடியுமா?**

இந்தப் பொறிமுறையானது குற்றவாளிகளுக்கு எதிராக அது வழக்குத் தொடுப்பதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் வழக்குத்தொடுத்தல்கள் என்பது உறுப்பு நாடுகளிலும் அத்துடன் தமது அதிகாரவரம்பிற்கு கீழுள்ள அல்லது தமது நிலப்பரப்பினைக் கடந்து செல்லும் குற்றவாளிகள் தொடர்பில் சர்வதேச அதிகாரவரம்பை (கீழே பார்க்கவும்) பயன்படுத்தும் அவர்களுடைய விருப்பத்திலும் தங்கியுள்ளது.
வழக்குகளைத் தொடர்வதற்கு சிவில் சமூகங்கள் மற்று நீதிச் சம்பியன்கள் தொடர்ந்தும் ஒரு சுயாதீன நீதிமன்றம் அல்லது இந்த வழக்குகளை விசாரிப்பதற்கான நீதிமன்றங்களுக்கு ஆதரவாக வாதிடுவது அவசியமாகும்.

சர்வதேச சமூகமானது ஊக்குவிக்கும் ஒரு தெரிவாக சிலவேளைகளில் எதிர்காலத்தில் ஒரு கலப்பின நீதிமன்று அல்லது நீதிமன்றம் உள்ளது. இந்தப் பொறிமுறையின் தற்போதைய ஆணையின் முடிவில் மனித உரிமைகள் சபையின் 51 ஆவது அமர்வில் எதிர்காலப் பொறுப்புக்கூறல்கள் பற்றி பரிந்துரைகளை மேற்கொள்வார் எனத் தீர்மானத்தின் 16 ஆவது பத்தி குறிப்பிடுகிறது. சர்வதேச சமூகம், மனித உரிமைகள் உயர் ஆணையாளரின் அலுவலகம் மற்றும் எதிர்கால பொறுப்புக்கூறல் பொறிமுறைகள் எப்படி இருக்கும் என்பதற்கான பொறிமுறை ஆகியவற்றுக்கு சிவில் சமூக அமைப்புக்கள் பரிந்துரைகளை மேற்கொள்வதற்கான ஒரு முக்கிய சந்தர்ப்பம் இதுவாகும்.

**வழக்கு ஆவணங்களின் நம்பகத்தன்மை**

எதிர்காலத்திற்காக வாக்குமூலங்கள், ஒலிக்கட்புல பொருட்கள் மற்றும் ஆவணங்களைப் பாதுகாக்கும் இலங்கைக்கான ஒரு குறிப்பிட்ட பொறிமுறையினை தயாரித்தல் என்பன முன்னோக்கிச் செய்யடவேண்டிய பணியின் ஒரு முக்கிய அம்சமாக உள்ளது. தற்போது , பெருமளவான பெறுமதியான ஆவணங்கள் தனிநபர்களின் கைகளிலுள்ளது அத்துடன் அவர்களுக்கு ஏதாவது நடந்தால் கடந்தகாலத்தில் செய்த வேலைகளை இழக்க நேரிடும். நீண்ட காலம் புரையோடிப்போன முரண்பாட்டில் பெரியளவிலான அனுபவமும் நிறுவனசார் நினைவுகளும் இழக்கப்படுகிறது ஆனால் ஒரு நாளைக்கு அது முக்கியமானதாக ஒரு வழக்கிற்கு இருக்கும்.

இந்தப் பொறிமுறையானது அங்குள்ள ஆதாரங்களைச் சேகரித்து , பகுப்பாய்வு செய்து அதனை ஒரு காப்பகத்தில் ஒழுங்குபடுத்தி வைத்திருக்கும், இதனால் இந்த ஆதாரங்கள் பாதுகாக்கப்படுவதுடன் பாதுகாப்புச் சங்கிலியும் பாதுகாக்கப்படும். இது இரகசியமான வழக்கு ஆவணக் கோவைகளை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படலாம்.

இந்தப் பொறிமுறையானது யாரிடமிருந்து அது தகவல்களை எடுக்கின்றதோ அவர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வது அவசியமாகும், அத்துடன் தகவல் அறிந்த ஒப்பந்தம், ‘ எந்த தீங்கும் செய்யாதே’ மற்றும் நம்பிக்கை ஒப்பந்தங்கள் உட்பட கடுமையான மனித உரிமைகள் கொள்கைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.

**யார் இதைப் பார்ப்பதற்கு அனுமதி இருக்கும்?**
வழக்கு கோவைகள் மற்றும் ஆதாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதிக்கு வேறு சட்ட அதிகாரங்களிலுள்ள வழக்கறிஞர்கள் வேண்டுகோள் விடுக்கலாம். இது இரகசியாகப் பேணப்படும் அத்துடன் பகிரங்கப்படுத்தப்படமாட்டாது. தண்டனை அமைப்புக்கள் மற்றும் வடிகட்டல் மற்றும் ஆய்வு அமைப்புக்களும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான அனுமதியைக் கோரலாம்.

தகவல்களை பெற்றுக்கொள்வதற்கான அனுமதி குறித்த நெறிமுறைகளை உருவாக்குவது இந்தப் பொறிமுறைக்கு அவசியமானதாகும்.

ஒரு ஆதாரக் களஞ்சியமானது பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தகவல்களைப் களஞ்சியப்படுத்தக் கூடியதாகவுள்ள அதேவேளையில் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகளை அடையாளங்கண்டு பின்னர் அவர்கள் வெளிநாட்டிற்குப் பிரயாணம் செய்தால் அவர்களைக் கைது செய்வதற்கு இன்னும் நிறைய வேலைசெய்யப்பட வேண்டும். குற்றவியல் வழக்குகள் வெற்றிபெறுவதற்கு இலங்கையை விட்டுப் வெளியே பிரயாணம் செய்யும் இராணுவ மற்றும் அரச அதிகாரிகள் மீது ஒரு கண் வைத்திருப்பது அவசியமாகும் அதேவேளையில் இறுதியில் அவர்களது பிரசன்னமும் அவசியமானதாக உள்ளது. இது கட்டமைப்பு ரீதியான விசாரணைகள் திறக்கப்படுவதை தடுக்காது, அது பற்றி நாங்கள் கீழே பார்ப்போம்

## <u>இந்த ஆதாரங்களை வெவ்வேறு வழிகளில் பயன்படுத்தல்</u>

ITJP ஆனது இந்தப் களத்தில் பல வருடங்களாக அமைதியானமுறையில் பணியாற்றி வருகின்றது அத்துடன் எமது அனுபவங்களில் சிலவற்றை பகிர்ந்து கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

**சர்வதேச சட்டவரம்பு**
“குற்றவாளி அல்லது பாதிக்கப்பட்டவரின் தேசியம், குற்றம் இடம்பெற்ற இடம் என்பவற்றை கருத்திலெடுக்காமல் குறிப்பிட்ட குற்றங்கள் தொடர்பில் குற்றவியல் சட்ட நடவடிக்கைகளை ஒரு அரசு கொண்டுவருவதை அவசியமாக்கும் அல்லது அனுமதிக்கும் ஒரு சட்டரீதியான கொள்கையாக” சர்வதேச சட்டவரம்புக் கொள்கை மரபுவழியாக வரையறுக்கப்படுகிறது[3]. “குற்றவாளி அல்லது பாதிக்கப்பட்டவரின் தேசியம், குற்றம் இடம்பெற்ற இடம் என்பவற்றை கருத்திலெடுக்காமல்[4] குற்றவாளிக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை கொண்டு வருவதற்கு உரித்துடைய மற்றும் கடப்பாட்டைக் கூட கொண்டுள்ள அரசுகளின் சர்வதேச நலன்களுக்கு குறிப்பிட்ட குற்றங்கள் குந்தகம் விளைவிப்பவையாகவுள்ளன என்ற எண்ணத்தை சர்வதேச சட்ட அதிகாரம் அடிப்படையாக கெண்டது”. சர்வதேச சட்டவரம்பானது உலகில் எங்கு என்றாலும் எவராலும் புரியப்பட்ட சர்வதேசக் குற்றங்களை விசாரிக்க அனுமதிக்கிறது, அத்துடன் இது போர்க்குற்றங்கள், சித்திரவதை, மனித குலத்திற்கு எதிரான குற்றம், இனஅழிப்பு , கடற்கொள்ளை , விமானக்கடத்தல் , பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் ஐநா பணியாளர்கள் மீதான தாக்குதல்கள் போன்ற மோசமான சர்வதேசக் குற்றங்களை புரிந்த குற்றவாளிகளைக் குறிக்கின்றது.

**ரோம் சட்டத்திற்கு முன்னுரை**
சர்வதேச குற்றவியல் நீதிமன்றச் சட்டத்தின் முன்னுரையானது சர்வதேச நியாயாதிக்க கோட்பாட்டினுடைய கொள்கையினை உறுதிப்படுத்துவதுடன் “சர்வதேச சமூகத்திற்கு கரிசனையை ஏற்படுத்தும் மோசமான குற்றங்கள் தண்டிக்கப்படாமல் போகக்கூடாது என்பதையும் அத்துடன் தேசிய மட்டத்தில் நடவடிக்கைகள் எடுப்பதன் மூலமும் அத்துடன் சர்வதேச ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலமும் அவர்களது வினைத்திறன் மிக்க வழக்குத்தொடரல் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதையும் உறுதிப்படுத்துகிறது”. ( பத்தி 4 சர்வதேச சட்ட அதிகாரம்)

எங்கே குற்றம் புரியப்பட்டது , குற்றஞ்சாட்டப்பட்டவரின் தேசியம் , வசிக்கும் நாடு அல்லது வழக்குத்தொடரும் அமைப்புடனான வேறு ஏதாவது உறவு என்பவற்றைப் பாராமல் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு நபர் மீது குற்றவியல் சட்ட அதிகாரத்தினை கோருவதற்கு சர்வதேச அமைப்புகளுக்கு அல்லது அரசுகளுக்கு சர்வதேச சட்டவரம்பு அனுமதி வழங்குகின்றது அத்துடன் தமது சொந்த உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடரவும் அனுமதிக்கின்றது.

---

[3] Xavier Philippe, The principles of universal jurisdiction and complementarity: how do the two principles intermesh?, https://international-review.icrc.org/sites/default/files/irrc_862_philippe.pdf

[4] Mary Robinson, ‘Foreword’, The Princeton Principles on Universal Jurisdiction, Princeton University Press, Princeton, 2001, p. 16

உண்மையில், இந்தக் கருத்தைப் பிரயோகிப்பதில் ஒவ்வொரு நாட்டினுடைய சட்டமுறையும் சற்று வித்தியாசமாகவே செயற்படுகிறது. கூடுதலான சந்தர்ப்பங்களில், வழக்கறிஞர்களுக்கு குற்றஞ்செய்தவர்கள சில சந்தர்ப்பங்களில் நாட்டில் இருப்பது அவசியமாகிறது. ஓவ்வொரு நாடும் சர்வதேச சட்ட அதிகாரத்தின் கீழ் தமது எல்லைகளுக்குள்ளேயே குறிப்பிட்ட குற்றங்களுக்கு வழக்குத் தொடரக்கூடியதாக வரையறை செய்கின்றன. பொறுப்புமுறைகள், சட்ட அதிகாரத்தை தூண்டும் நிலைமைகள், ஆதாரரீதியான தேவைகள், சாட்சி மற்றும் பாதிக்கப்பட்டவரின் பாதுகாப்பு அல்லது பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் போன்ற கேள்விகள் மற்றும் பல விடயங்கள் அடிக்கடி நாட்டுக்கு நாடு வேறுபட்டதாக இருக்கும்.

ஒரு குற்றஞ்சாட்டப்பட்ட குற்றத்திற்கு ஒரு அரசு முற்றிலும் எந்த தொடர்பினையும் (தொடர்பு அல்லது இணைப்பு) கொண்டிருக்காத ஒரு ‘தூய சர்வதேச சட்ட அதிகார’ வழக்காக பெரும்பாலும் செயல்படுத்ப்படாமல் இருந்தால் கவனமாக இருக்க வேண்டும். நீதிக்கான சர்வதேச நீதிமன்று ஒரு வழக்கிலே சர்வதேச சட்ட அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கு நியாயாதிக்கத்தினை பயன்படுத்தமுனையும் அரசுடன் ஒரு தொடர்பு இருக்க வேண்டும் என்பது அவசியம் என்றும் குற்றஞ்செய்தவர் அதனுடைய நிலப்பரப்பினுள் இல்லாவிட்டால் அல்லது அந்த அரசுடன் வேறு எந்த தொடர்பும் இல்லாவிட்டால் சர்வதேச சட்ட அதிகாரத்தை உறுதிப்படுத்தமுடியாது எனவும் முடிவுசெய்துள்ளது.

**ஜெனரல் ஜெகத் ஜெயசூரியாவிற்கு எதிரான வழக்கு**

பிரேசில், சிலி, கொலம்பியா, சுரிணம் மற்றும் ஆஜர்ந்தீனா ( அங்கு அவர் தனது ஆவணத்தினை சமர்ப்பித்திருக்கவில்லை) போன்ற ஐந்து இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு இலங்கையின் தூதுவராக இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்த ஜெனரல் ஜகத் ஜெயசூரியாவிற்கு எதிராக 2017 இல் இலத்தீன் அமெரிக்காவில் ஒரே நேரத்தில் ITJP ஆனது பல வழக்குகளைத் தாக்கல் செய்தது. ஜெனரல் ஜெயசூரியாவிற்கு இந்த காத்திருக்கும் குற்றச்சாட்டுப் பற்றி தகவல் அறிவிக்கப்பட்டு அவர் பிரேசிலை விட்டுத் தப்பிச் சென்றதுடன் தனது வேலையையும் விட்டுச் சென்றார். சிலி மற்றும் பிரேசில் ஆகியன எமது வழக்குகளுக்கான சட்ட அதிகாரம் இருந்ததாக உறுதிப்படுத்தின , அவர்கள் தொடர்ந்து சென்று ஒரு விசாரணையை ஆரம்பித்து அவரை குற்றங்கண்டிருக்க முடியும் என்பதை இது குறிக்கின்றது. சிலியில் இந்த வழக்கிற்காக ஒரு வழக்கறிஞர் ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆயினும் அவர் நாட்டை விட்டுச் சென்றதும் தொடர்ந்தும் இந்த வழக்கினை முன்னெடுத்துச் செல்வதற்கான அரசியல் விருப்பம் குறைவாக காணப்பட்டது. ஒரு வழக்கினைத் தாக்கல் செய்யும் போது நீங்கள் வழக்கினைக் கொண்டுவர விரும்பும் நாட்டில் சிவில் சமூகக் குழுக்கள் மத்தியில் ஒரு ஆதரவுக் குழுவினைக் கட்டியெழுப்பியிருப்பது அவசியம் அத்துடன் நீங்கள் அதில் வெற்றிகொள்வதற்கு அதற்கான ஆதரவுதேடும் நடவடிக்கையை வெளிநாட்டில் மேற்கொள்ளவேண்டும் என்பதும் ஒரு பாடமாக இருந்தது. சிலியில் வழக்கினை மீளத்திறப்பதற்கு அழுத்தம் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் இன்னும் உள்ளது, 2008-9 காலப் பகுதியில் ஜோசப் முகாமில் சித்திரவதை இடம்பெற்ற போது கட்டளையதிகாரியாக இருந்த அவரது வகிபாகத்திற்காக இலங்கையில் ஜெயசூரியா விசாரிக்கப்படுவார் என்பதற்கான சாத்தியக்கூறு குறிப்பாக தற்போது குறைவடைந்து செல்கின்றது.

சர்வதேச சட்ட அதிகார வழக்கினை தாக்கல் செய்வதற்கு பெருமளவிலான முன்தயாரிப்புகள் அவசியம். முன்னதாகவே ஒரு விரிவான வழக்கினை தயாரித்து வைத்திருப்பது அவசியமாகும். இதைத்தான் ஒரு பொறிமுறை செய்யவேண்டும் அத்துடன் இதனை ITJP ஏற்கனவே செய்துவருகிறது, இதற்கு தீர்ப்பாயங்கள் மற்றும் சர்வதேச நீதிமன்றங்களிலிருந்து சிறந்த வழக்கறிஞர்களையும், ஐநா மனித உரிமைகள் நிபுணர்கள் மற்றும் இலங்கையர்களுடன் இணைந்து பணியாற்றும் ஆராய்ச்சியாளர்களையும் பாவித்து வருகிறது. இந்த இலங்கையர்களில் தமிழர், சிங்களவர் மற்றும் முஸ்லீம்கள் உள்ளார்கள் இவர்கள் தமது பாதுகாப்பு குறித்து தம்மை அடையாளங்காட்டாமல் இருக்கின்றனர் ஆனால் அவர்கள் ஒரு முக்கிய பணியை ஆற்றுகிறார்கள். ITJP இற்காக இலத்தீன் அமெரிக்காவில் வழக்குகளைத் தாக்கல் செய்த என்னுடைய நல்ல நண்பனான கார்லெஸ் காஸ்ரேசன தான் ஒரு வேட்டைக்காரன் இல்லை எனவும் தான் பொறுமையாக வலையை போட்டுவிட்டு இலக்கு நீந்தி அதற்குள் வருவதற்காக காத்திருக்கும் ஒரு மீனவன் என எப்போதும் கூறுவார். பொறுமை என்பது மிகவும் முக்கியமானதாகும்.

**போர்க் குற்றப் பிரிவுகளின் கட்டமைப்பு ரீதியான விசரணைகள்**

கட்டமைப்பு ரீதியிலான விசாரணைகள் கார்லஸ் காஸ்ரேசன குறிப்பிடும் வலை போடுவதன் பகுதியாக இருப்பதுடன் ஜேர்மன் பெடெரல் வழக்குகளால் (GFP) சர்வதேசக் குற்றங்களை அணுகித் தீர்ப்பதற்கு பிரதானமாகப் பாவிக்கப்பட்ட ஒரு மூலோபாயமாகவும் இருக்கின்றது[5]. கட்டமைப்பு ரீதியிலான விசாரணைகள் இனந்தெரியாத நபர்களுக்கு எதிராக உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகளை

[5] Felix Graulich, Die Zusammenarbeit von Generalbundesanwalt und Bundeskriminalamt bei dem Vorgehen gegen den internationalen Terrorismus, Duncker & Humblot, 2013, p. 317 (hereinafter ‘Graulich – Zusammenarbeit’); cf. Bundestag, Responses of the Federal Government, 7 November 2012, Bundestag Drucksache 17/11339, p. 3, response to question 7

உள்ளடக்குகின்றன. இந்த விசாரணைகளின் நோக்கம் விரிவான அமைப்பு ரீதியான கட்டமைப்புக்கள்[6] பற்றிய தகவல்களை சேகரித்தல் என்பதாக உள்ளது ஆனால் தனிப்பட்ட குற்றவியல் பொறுப்புகளை வழங்குவது[7] என்பதாக இல்லை. ஒரு விசாரணை குறித்த நபரை நோக்கியதாகவே மட்டும் இருந்தால் விரிவான அமைப்பு ரீதியான கட்டமைப்புக்கள் பற்றிய தகவல்கள் தவறவிடப்படும்.

ஒரு கட்டமைப்பு ரீதியான விசாரணை தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பினை வழங்குவதை இலக்காக கொண்ட ஒரு தனி வழக்கின் நடைமுறை விதியினுடைய சிக்கல்கள் நிறைந்த நிலைமையை சுதந்திரமாக ஆராய்வதற்கு சட்ட அமுலாக்கல் முகவர்களை அனுமதிக்கின்றது.

பல சட்ட அதிகார போர்க்குற்ற அலுவலகங்கள் இருக்கும் ஐரோப்பாவில் குற்றவாளிகள் பற்றிய கட்டமைப்பு ரீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்கு இந்த பொறிமுறை ஐரோப்பாவிலுள்ள வழக்கறிஞர்களுடன் ஈடுபடக்கூடிய சாத்தியம் உள்ளது.

**ஏனைய சட்டஅதிகாரங்களில் சிவில் இழப்பீட்டு வழக்குகள்**

குற்றவியல் பொறுப்புக்கூறல் என்பது ஒரு கருவி மாத்திரமே. குறிப்பாக குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளி இரட்டைப் குடியுரிமையைக் கொண்டிருந்து இரண்டு நாடுகளின் ஒரு பிரஜையாக இருந்தால் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீட்டுக் கோரிக்கையைத் தாக்கல் செய்யமுடியும்.ஏப்பிரல் 2019 இல் ITJP அமெரிக்காவிலுள்ள சட்டநிறுவனமான கோஸ்பெல்டுடன் சேர்ந்து கனடா பிரஜையான றோய் சமதானம் என்பவர் கோத்தபாஜ ராஜபக்சவிற்கு எதிராக கலிபோனியாவில் ஒரு இழப்பீட்டுக் கோரிக்கையை தாக்கல் செய்வதற்கு உதவியது. கோத்தபாஜ ராஜபக்ச அந்த நேரத்தில் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்தார். 27 யூனில் கோத்தபாஜ பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது பொலிஸ் மற்றும் இராணுவத்தின் சித்திரவதைகளில் உயிர்தப்பிய மேலும் 10 தமிழர்கள் மற்றும் சிங்களவர்களை இணைத்து திருத்தப்பட்ட நட்ட இழப்பீடு வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டது. 2019 தேர்தல்களுக்குப் பின்னர் கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியானார் அவரின் பதவியுடன் தொடர்புபட்ட நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தண்டணையிலிருந்து பாதுகாப்பினை தானாகவே பெற்றுக் கெண்டமையால் நங்கள் கலிபோணியாவில தாக்கல் செய்த இழப்பீட்டு வழக்கினை பின்வாங்க வேண்டியிருந்தது. எவ்வாறாயினும் வழக்குத்தொடுநர்கள் கோட்பாட்டு அடிப்படையில் கோத்தபாய ராஜபக்ச தன்னுடைய அமெரிக்க குடியுரிமையை இப்பொழுது கைவிட்டிருந்தாலும் இறுதியாக தனது பதவியை இழக்கும் போது மீண்டும் வழக்கினைத் தாக்கல் செய்யமுடியும்.

தண்டணையிலிருந்து பாதுகாப்பு என்பது வழமையாக நாட்டின் தலைவர்களுக்கு மட்டும் என மட்டுப்படத்தப்பட்டதாக இருக்கிறது ஆகவே சித்திரவதை , வலிந்து காணாமற்போதல்கள்,கொலைகள், நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் படுகொலைகள் போன்ற மோசமான சர்வதேசக் குற்றங்களில் சம்பந்தப்பட்டிருக்ககூடிய ஏனைய அரசாங்க மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிரான வழக்குகளை தாக்கல் செய்யும் சந்தர்ப்பம் உள்ளது.

**ஐநா அமைப்புகளுக்கான முறைப்பாடுகள்**

பத்து ஐநா உடன்படிக்கை அமைப்புக்கள் உள்ளன இவற்றில் எட்டு அமைப்புக்கள் அரசுகளின் உடன்படிக்கை மீறல்கள் பற்றி பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் (பின்னிணைப்பிலுள்ள பட்டியலைப் பார்க்கவும்)

அமெரிக்காவில் றோய் சமதானத்தின் வழக்கு ஐநா மனித உரிமைகள் குழுவில் அவர் பெற்றுக்கொண்ட வெற்றியால் பெரிதும் பலப்படுத்தப்பட்டது , ஐநா மனித உரிமைக் குழுவில் கனடாவைச் சேர்ந்த சட்டவாளர்கள் இலங்கைக்கு எதிராக ஒரு முறைப்பாட்டை மேற்கொள்வதற்கு அவருக்கு உதவி செய்திருந்தார்கள். அவர் இழப்பீட்டைப் பெற்றிருக்க வேண்டும் ஆனால் அவர் கூறியது நம்பத்தகுந்தது என ஐநாவிடமிருந்து ஒப்புதல் ஒன்றையே அவர் பெற்றுக் கொண்டார். ITJP ஆனது ஐநாவில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வேறு முறைப்பாடுகளை செய்திருப்பதுடன் குற்றவியல் வழக்கு ஒன்று இடம்பெற்றால் அது அவர்களுக்க உதவும் என்பதால் உண்மையை நிறுவுவதற்கான முதற்படியாக தொடர்ந்தம் முறைப்பாடுகளை செய்துவருகின்றது

---

[6] Matthias Jahn, in Michael Heghmanns and Uwe Scheffler (eds.), Handbuch zum Strafverfahren, C.H. Beck, 2008, chap. I, para. 82 (hereinafter 'Jahn – Handbuch Strafverfahren'); Graulich – Zusammenarbeit, pp. 316, 337 and 340; Jörg Ziercke, "Welche Eingriffsbefugnisse benötigt die Polizei?", in Datenschutz und Datensicherheit, 1998, vol. 22, no. 6, pp. 319 and 321 (hereinafter 'Ziercke – Eingriffsbefugnisse'); Wolfgang Sielaff, "Am selben Strang ziehen: Die Zusammenarbeit von Polizei und Staatsanwaltschaft bei der Bekämpfung der Organisierten Kriminalität", in Kriminalistik, 1989, vol. 43, no. 3, pp. 141 and 142.

[7] Cf. Bundestag, Responses of the Federal Government, 7 November 2012, Bundestag Drucksache 17/11339, p. 3, response to question 7, see supra note 36

**விசா தடைகள் மற்றும் தனிநபர்கள் மீதான இலக்கு வைக்கப்பட்ட தடைகள்**
தனிநபர்களுக்கு எதிராக வழக்குதொடரமுடியாத சந்தர்ப்பங்களில் அவர்களுடைய நடத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது மற்றும் சகித்துக் கொள்ளப்படமுடியாதது என்ற செய்தியை அனுப்புவதற்கு ஏனைய வழிகள் உள்ளன.

**ஒதுக்கீடுகள்**
2019 இல் ITJP சவேந்திர சில்வா பற்றிய ஒரு விரிவான ஆவணக் கோவையைத்[8] தொகுத்தது அது போரில் உயிர் பிழைத்து வெளிநாடுகளுக்கு தப்பி வந்திருந்தவர்களிடமிருந்து பெறப்பட்ட விரிவான வாக்குமூலங்களை உள்ளடக்கியிருந்தது. இந்த ஆவணக் கோவை 2015 இல் ஐநாவினால் ஆவணப்படுத்தப்பட்ட போர்க்குற்றங்களுடன் இராணுவத்தையும் சவேந்திர சில்வாவையும் இணைக்கும் வகையில் 2009 இல் வன்னியில் பல்வேறு கிராமங்களிலும் சில்வாவினுடைய 58 ஆவது படைப்பிரிவு இருந்த இடங்களை கொண்டிருக்கும் ஆதாரங்களையும் உள்ளடக்கியிருந்தது. தகவல் ஒரு நபரை ஒரு சம்பவத்துடன் மற்றும் குற்றச்செயலுடன் இணைக்கின்றது இதனால் நாங்கள் அதனை ஆதார இணைப்பு எனக் கூறுகின்றோம். அமெரிக்காவில் வசிக்கும் தொழிநுட்ப ரீதியிலான அறிவினை நன்கு கொண்டிருக்கும் ஒரு தமிழர் இணையத்தளத்தில் இருந்து அரசங்கத்தினால் அழிக்கப்பட்டிருந்த 2009 ஆம் ஆண்டுக்குரிய பாதுகாப்பமைச்சின் நிலைமை அறிக்கைகளை மீளப்பெற்றுக் கொள்வதற்கு எங்களுக்கு உதவி செய்தார். சக பணியாளர் ஒருவர் அதன்பின்னர் இந்த அறிக்கைகளை நாளுக்கு நாள் வாசித்துப் பார்த்து கவனமான முறையில் 58 ஆவது படைப்பிரிவு இருந்த இடங்களை பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுடன் இணைத்தார். இந்த வேலை ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் சவேந்திர சில்வா மற்றும் அவருடைய குடும்பம் அமெரிக்காவினால் கண்டிக்கப்படுவதற்கு உதவி செய்தது. அவர்களில் எவரும் அமெரிக்காவிற்குப் பிரயாணம் செய்ய முடியாது அத்துடன் ஏனைய நாடுகளும் விசாக்கள் வழங்குவது பற்றி இரண்டு தடவைகள் சிந்திக்கும் என்பதை இது கருதுகிறது.

**லேகி சட்டம்**
பாரிய மனித உரிமைகள் மீறல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளுக்கு அரசாங்கத்தின் பகுதிகள் உதவிகள் வழங்குவதை தடுக்கும் இன்னுமொரு அமெரிக்கச் சட்டம் இதுவாகும். ஒரு இராணுவ அல்லது பொலிஸ் பிரிவு குற்றஞ்சாட்டப்பட்ட மீறல்களால் கறைபடிந்த ஒருவரால் தலைமைதாங்கப்படுவதாக கருதப்பட்டால் பின்னர் அமெரிக்க அரச திணைக்களத்தின் நிதி உதவியினை அது பெற்றுக் கொள்ளமுடியாது. தர்க்கரீதியாக இலங்கை இராணுவத்தின் தளபதி கறைபடிந்தவராக கருதப்படுவதால் முழு இலங்கை இராணுவமுமே அமெரிக்க உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியற்றது. எவ்வாறாயினும் லேகி சட்ட தடைகள் இன்னமும் பகிரங்கப்படத்தப்படவில்லை. TID அல்லது STF போன்ற அணிகளால் தற்போதும் மேற்கொள்ளப்பட்டுவரும் மீறல்கள் பற்றி தகவல்கள் சேகரித்து இந்தச் செயல்முறைக்கு வழங்கி அதனை நன்கு தகவல் அறிந்த ஒன்றாவும் மற்றும் புதுப்பித்த தகவல்களைக் கொண்டதாகவும் வைத்திருத்தல் முக்கியமானதாகும்.

**ஐநா ஆய்வுக்குட்படுத்தல் மற்றும் வடிகட்டல்**
2018 இல் மாலியில் ஐநா அமைதி காக்கும் படையணிக்கு தலைமைதாங்கிய இலங்கை மேஜர் ஒருவர் நாட்டுக்கு திருப்பி அனுப்பியதற்கு ITJP பங்களிப்புச் செய்தது. திறந்த மூல தகவலை அடிப்படையாக கொண்ட எமது ஆராய்ச்சி அவர் 2009 போரில் 58 ஆவது படையணியில் இருந்துள்ளார் என்ற உண்மையைக் கண்டுபிடித்தது. எத்தனை குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளிகள் அமைதி காக்கும் படையினராக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள் என்பதனை கோடிட்டுகாட்டி ஒரு இரகசிய ஆவணம் ஒன்றையும் தயாரித்து அதனை ஐநா அமைதி காக்கும் பணியுடன் நாங்கள் பகிர்ந்து கொண்டோம். அவர்களது தரவுத்தளத்தில் உள்ளிடப்படுவதை உறுதிசெய்வதற்காக ஏராளமான பெயர்கள் ஐநாவுடன் பகிரப்பட்டது.

**இராஜதந்திர ரீதியான மீளாய்வு**
இலங்கையில் இருந்து இராஜதந்திரிகளாக யாரை எற்றுக்கொள்கிறோம் என்பதைப் பார்ப்பதற்கு இன்னும் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பது அவசியமாகும் – போர் முடிவுக்கு வந்ததில் இருந்து பாதுகாப்பு அதிகாரிகள் என்ற ரீதியில் யுகே ஆனது ஒரு பயங்கரமான பதிவைக் கொண்டுள்ளது. ஆனால் உலகம் முழுவதும் பெரும் எண்ணிக்கையில் இராணுவ அதிகாரிகள் வெளிப்படையான தண்டனையிலிருந்து பாதுகாப்புடன் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். அது படிப்படியாக மாற்றமடைவது போல் தெரிகிறது ஆனால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள சிவில் சமூக அமைப்புக்கள் தொடர்ச்சியான விழிப்புடன் இருப்பது அவசியமாகும்.

---

[8] https://itjpsl.com/reports/shavendra-silva

**பெயர் குறிப்பிடுதலும் அவமானப்படுத்துதலும்**
மோசமான எதிர் வழக்கினைச் சந்திக்ககூடிய ஆபத்து உள்ளதால் பாரிய மனித உரிமை மீறல்களில் சம்பந்தப்பட்ட தனி நபர்களை பெயர் குறிப்பிடுதலும் அவமானப்படுத்தலும் அரச சார்பற்ற நிறுனங்களுக்கு ஒரு ஆபத்தான முயற்சியாக உள்ளது. ஆயினும் உண்மையே ஒரு பாதுகாப்பாக உள்ளது அத்துடன் பொதுவாக சிறந்த சட்டவாளர்கள் இலவச சட்டப்பணி அடிப்படையில் இதற்கு உதவிசெய்ய விரும்புகிறார்கள்.

சில வழக்குகளில், ஆதாரங்கள் அதிகளவானதாக இருக்கிறது- உதாரணமாக 2019 இல் ITJP தற்போது பாதுகாப்பு செயலாளராக உள்ள கமால்குணரட்ண[9] தொடர்பில் போர்க்காலத்தில் அவரது பங்குகுறித்து நீண்டதொரு ஆவணக்கோவையை தயாரித்து அதை வெளியிட்டது. சவேந்திர சில்வா போன்று இந்த ஆவணக்கோவையும் அவரைத் தடைசெய்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை வழங்குகின்றது – அத்துடன் எங்களால் முதலில் முன்வைக்கப்பட்ட வாதமானது ஐநா மனித உரிமைகள் சபைக்கான மிசேல் பாசலட்டினுடைய 2021 ஆம் ஆண்டு அறிக்கையில் தற்போது வலுப்படுத்தப்பட்டிருக்கிறது , இந்தஅறிக்கை கமால்குணரட்ணவையும் சவேந்திர சில்வாவுடன் குற்றஞ்சாட்டப்பட்ட குற்றவாளி எனக் குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாணத்தில் அல்லது மட்டக்களப்பில் உள்ள மக்களுக்கு வெளிப்படையாகவே கூறக்கூடியவாறு பதிலளிக்க வேண்டிய வழக்கு ஒன்று உள்ளது என்பது போல் கூற தோன்றலாம் ஆனால் சட்டத்தில் அந்த வழக்கு ஆதாரங்களுடன் மற்றும் சட்டப் பகுப்பாய்வுடன் விரிவான விபரங்களுடன் விபரிக்கப்பட வேண்டும், பின்னர் இலங்கையில் என்ன நடந்தது என்பது பற்றி எதுவுமே தெரியாதவர்கள் மற்றும் தமது நாட்டுக்கு அருகில் இடம்பெறும் பிரச்சினைகளால் திசை திருப்பப்பட்டிருப்பவர்களையும் செல்லவாக்குச் செலுத்தக்கூடியதாக பரவலாக அதனை பரப்புவதும் அவசியமாகும்.

**ஆவணக் கோவைகளும் அறிக்கைகளும்**
ITJP ஆனது தனிநபர்கள் பற்றி ஆய்வுகளை கடந்த காலப் போரில் புரியப்பட்ட மோசமான சர்வதேசக் குற்றங்களுக்கான அவர்களது தனிப்பட்ட பொறுப்புகள் பற்றிய விபரங்களுடன் அவர்கள் பற்றிய தகவல்களை வைத்திருக்கின்றது. சில பகிரங்கமாக வெளியிடப்படுகின்றன ஆனால் ஏனையவை இரகசியமாக வைக்கப்படுகின்றன.

ஜோசப் முகாம் உட்பட சித்திரவதை இடம்பெற்றதாக அறியப்பட்ட இடங்கள் பற்றி மிகவும் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன - தனிப்பட்ட ரீதியில் ஜெகத் ஜெயசூரியாவிற்கு எதிராக எவ்வளவு ஆதாரங்களை வைத்திருந்தோம் என்பதை உணர்ந்து கொண்டோம்- இது இரகசியமான முறையில் அவற்றை இலத்தீன் அமெரிக்க வழக்குகளுக்கு ஒன்று சேர்க்க தொடங்குவதற்கு எங்களுக்கு உதவியது.

எங்களுடைய அறிக்கைக்காக[10] நாங்கள் TID ( பயங்கரவாத விசாரணைப் பிரிவு) பற்றி தகவல்களை சேகரிக்க ஆரம்பித்த போது சித்திரவதைகளுடன் தொடர்புபட்ட அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் சிக்கலான கட்டமைப்புக்கள் வெளியே வரத்தொடங்கியது அத்துடன் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக 1991 ஆம் ஆண்டு சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர் பாதுகாப்புச்சட்டத்தின் கீழ் சித்திரவதைக்கு எதிரான எங்களது அமெரிக்க நீதிமன்ற வழக்கிற்கு தகவல் பெற்றுக் கொள்ளவும் ஆதரவு வழங்கவும் இது எங்களுக்கு உதவியாக இருந்தது. TID தன்னை மறுசீரமைப்புச் செய்ய தவறினால் வெளிநாடுகள் TID இனரிக்கு பயிற்சிகள் வழங்கவோ மற்றும் சேர்ந்து பணியாற்றவோ கூடாது என்ற வாதத்தை இது மேலும் வலுவாக்கியது.

## OHCHR உடன் இணைந்து பணியாற்றவேண்டிய முக்கிய விடயங்கள்

**இந்தப் பொறிமுறையின் ஆணையைத் தெளிவுபடுத்தல் மற்றும் எதிர்பார்ப்புக்களை உருவாக்குதல்**
இந்த பொறிமுறையுடன் ஈடுபடுவதற்கும் அதனுடன் இணைந்து பணியாற்றுவதற்கும் திட்டமிடும் சிவில் சமூக அமைப்புக்ள் மற்றும் பாதிக்கப்பட்டவர் சமூகங்கள் அதனுடைய தனித்துவமான ஆணையின் அளவு மற்றும் வரம்பு எல்லைகள் குறித்து முழுமையாக விளங்கிக் கொள்ளுதல் மிகவும் முக்கியமாகும். இந்தப் பொறிமுறையானது ஒரு முக்கியமான ஆனால் எதிர்கால வழக்குத் தொடரலுக்கான வழக்கு ஆவணங்களை தயார் செய்வதற்கு ஊடாக நீதி மற்றும் பொறுப்புக்கூறலை நோக்கிய தனித்துவமான படியை குறிக்கின்றது, ஆனால் இந்தப் பொறிமுறையானது குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கான ஆணையைக் கொண்டிருக்கவில்லை.சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் ஏனைய நீதிச் சம்பியன்கள் இந்த வழக்குகளை விசாரிப்பதற்கு சுயாதீன நீதிமன்றங்களுக்கு ஆதரவாக தொடர்ந்தும் வாதிடுவது அவசியமாகும். இந்தப் பொறிமுறையுடன் வினைத்திறனுடன் பணியாற்றுதல் ஒரு நீண்ட கால முயற்சியாக இருக்கும், அத்துடன்

---

9 https://itjpsl.com/reports/kamal-gunaratne

10 https://itjpsl.com/reports/terrorism-investgation-division

தற்போது நடைபெறும் வேலையை மாற்றுவதை விட அதனைப் பூரணப்படுத்தும் மனித உரிமைகள் ஈடுபாட்டுக்கான ஒரு புதிய , மேலதிக சந்தர்ப்பமாகப் பார்க்க வேண்டும்.

**ஆதரவு பாதுகாப்பு மற்றும் சாட்சியாளர் பாதுகாப்பு**

இந்த சுயாதீனப் பொறிமுறையானது பாதுகாப்பு மற்றும் சாட்சியாளர் பாதுகாப்பிற்காக சில வளங்களை வழங்கலாம் அதேவேளையில், இந்தப் பொறிமுறையுடனான ஈடுபாடானது சாட்சிகளை மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களை ஆபத்திற்குள்ளாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் , சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் அரசாங்கங்கள் உரிய நிகழ்ச்சித் திட்டங்களையும் பாதுகாப்பு உட்கட்டுமானத்தினையும் உருவாக்க வேண்டும்.

**பாதிக்கப்பட்ட சமூகங்களுடன் ஈடுபாட்டையும் தொடர்பாடலையும் உறுதிப்படுத்தல்**

பொறிமுறை அதிகாரிகள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கிடையில் ஒழுங்கான மற்றும் வெளிப்படையான தொடர்பாடல் , ஒருங்கிணைப்பு மற்றும் ஈடுபாடு என்பன நம்பிக்கையைப் பேணுவதற்கும் மற்றும் இந்தப் பொறிமுறையின் நீண்ட கால ஆணைக்கான அரசியல் ஆதரவிற்கும் முக்கியமானவை. உரையாடல் மற்றும் ஆளுமையைக் கட்டியெழுப்புவதற்காக அர்ப்பணிப்பு மிக்க வெளியே சென்று சேரக்கூடிய தனிப்பட்ட தொடர்பு மற்றும் தொடர்பு மையங்கள் அத்துடன் உத்தியோகபூர்வமான உடன்பாடுகள் ( உதாரணமாக புரிந்துணர்வு உடன்படிக்கைகள், நெறிமுறைகள்) மற்றும் சந்தர்ப்பங்கள் மூலம் சாதகமான வேலை உறவினை வளர்த்துக் கொள்ளமுடியும்.

**நிதி மற்றும் பணியாளர்கள்**

எந்தப் பொறிமுறையினது தாக்கமும் அது எவ்வளவு சிறந்த நிதி மற்றும் பணியாளர்களை கொண்டிருக்கிறது என்பதிலே பெரிதும் தங்கியிருக்கும். இலங்கைக்கு வெளியே வழக்கறிஞர்களுடன் ஈடுபடுவதற்கான எண்ணம் இருக்கின்ற இந்தப் பொறிமுறையானது இலங்கையில் ஐக்கிய நாடுகளின் ஏனைய நடவடிக்கைகளில் இருந்து அவனுடைய அல்லது அவளுடைய சுயாதீனத்தன்மையை பேணுகின்ற அத்துடன் ஒரு நேர்த்தியான குற்றவியல் வழக்கினை உருவாக்குவதற்கு என்ன தேவை என்பதை விளங்கிக்கொள்ளும் அச்சமற்ற வழக்கறிஞர் அல்லது நீதிபதியினால் தலைமை தாங்கப்படுவது அவசியமாகும். அதிகளவிலான கண்காணிப்பு காணப்படுவதால் நாட்டுக்குள்ளேயிருந்து இந்த பொறிமுறையுடன் ஈடுபடமுயற்சிக்கும் அந்தப் பாதிக்கப்பட்டவர்களுக்கு கணிசமான ஆபத்து இருக்கும் என்பதால் இலங்கைக்குள் இந்தப் பொறிமுறையானது வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவது சாத்தியமற்றதாகவே உள்ளது. 2015 இல் ஐநாவின் இலங்கை பற்றிய உத்தியோகபூர்வ விசாரணை அறிக்கை போல், நிறைய வாக்குமூலங்கள் போர் இடம்பெற்ற மற்றும் போருக்குப் பின்னரான காலப் பகுதியில் மோசமாகப் பாதிக்கப்பட்ட மற்றும் உளவியல் ரீதியாகவும் மிகவும் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு வெளியே உள்ள அகதிகளிடமிருந்து வரலாம். பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுடன் தேவையில்லாமல் பல நேர்காணல்களை மேற்கொள்வதை தவிர்ப்பதற்குரிய கவனம் செலுத்தப்படுதல் அவசியமாகும். இது அவர்கள் தமது அனுபவத்தை மீளவும் சொல்வதை அவசியமாக்கும் அத்துடன் அவர்களுக்கு பெரியளவான உளவியல் பிரச்சினையை தூண்டும். உளவியல் ரீதியான ஆதரவு பற்றி கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

**பல்லினக்களுக்கிடையிலான பதற்றங்கள் மற்றும் வன்முறை**

மூன்று காலப் பகுதிகளில் பாரிய அக்கிரமங்களைக் கொண்ட குற்றங்கள் பல்லினக் குழுக்களுக்கு எதிராக பாரியளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. தற்போதைய இலங்கை அரசாங்கத்தின் இனப் பெரும்பான்மை சிங்களப் பௌத்த சித்தாந்தம் ஒரு அரச நடைமுறையாக மற்றக் குழுவைவிட ஒரு குழுவிற்கே ஆதரவு வழங்குவதாக உள்ளது, ஆனால் அத்துடன் ஏனைய இனக்குழுக்களுக்கு எதிராக குறிப்பாக அண்மைய காலங்களில் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு எதிராக வன்முறையினைத் தூண்டிவிடுவதில் முக்கிய பங்கையும் ஆற்றுகின்றது. மோசமான சர்வதேசக் குற்றங்கள் பற்றிய குற்றச்சாட்டுகளுக்கான அரசாங்கத்தின் பதிலாக தாங்கள் ஒரு பயங்கரவாதக் குழுவுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்ததாகவும் , இதுவொரு சமச்சீரற்ற போராக இருந்ததாகவும் அத்துடன் தாங்கள் சர்வதேச மனிதாபிமனச் சட்டத்திற்கு கீழ்படிய வேண்டியதில்லை எனவும் விவாதிப்பதாக உள்ளது. இந்தப் பொறிமுறையானது இந்தப் பதற்றங்களைப் பிரதிபலிக்க வேண்டும் அத்துடன் மற்றைய குழுவினை விட ஒரு குழுவுக்கு ஆதரவாக நடப்பதை தவிர்ப்பது அவசியமாகும். வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்துக் குழுக்களையும் இந்தப் பொறிமுறை சென்றடைவது அவசியமாகும் ஆனால் அவர்களுடைய துன்பங்களை ஒரே மாதிரியானது என சமப்படுத்தக் கூடாது.

## பரிந்துரைகள்

பிரதானமான இந்தப் பொறிமுறையானது இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான சரியான திசையை நோக்கிய ஒரு படியாக இருப்பதாக கருதப்படும் அதேவேளையில் இலங்கை இறங்கிவந்து அதனுடைய சர்வதேசக் கடப்பாடுகளை நிறைவேற்றும் என்ற கருத்தை சர்வதேச சமூகம் இன்னும் கொண்டுள்ளது என இலங்கையின் இறுதிப் போரின் பாதிக்கப்பட்டவர்களில் பலர் நம்புகிறார்கள். நல்ஆட்சி அரசாங்கத்திற்கு கீழ் கூட சிறிசேன

ஆட்சி போர்க் குற்றங்களில் இராணுவத்தின் பங்குபற்றி மறுத்து வந்தது அத்துடன் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான போதிய அரசியல் விருப்பையும் வெளிக்காட்டவில்லை என்பது கடந்த பத்து வருட காலப் பகுதியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. காணாமற்போனவர்களுக்கான அலுவலகம் மற்றும் இழப்பிடுகளுக்கான அலுவலகம் என்பவற்றால் தமது உரிமைகள் ஆபத்துக்குள்ளாக்கப்பட்டிருப்பதாக பாதிக்கப்பட்டவர்களில் சில கருதுகிறார்கள், அத்துடன் இந்த இரண்டு அமைப்புக்களும் நல்ல முன்னேற்றத்தை மேற்கொண்டுவருவதாக சர்வதேச சமூகம் அவற்றை தொடர்ந்தும் பாராட்டி வருவதாக அவர்கள் மிகவும் கவலையடைந்துள்ளார்கள். தமது அன்புக்குரியவர்களுக்காக உண்மை மற்றும் நீதியை வேண்டி நிற்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இதனால் தமது நலன்கள் பேணப்படமாட்டது என கவலையடைந்துள்ளார்கள். எவ்வாறு சிவில் சமூக அமைப்புக்ள் இந்தப் பொறிமுறையுடனும் தமக்குள்ளும் ஈடுபடமுடியும் என்பது பற்றி சில எண்ணங்களை வழங்குவதாக இந்த பரிந்துரைகள் அமைந்துள்ளன.

**1. இந்தப் பொறிமுறையுடன் ஈடுபடுதல்**

- இந்தப் பொறிமுறை அல்லது OHCHR இனைத் தொடர்புகொண்டு பின்வருவனவற்றை ஆராய்வதற்கான ஒரு சந்திப்பைக் கேட்கவும்
    - இந்தப் பொறிமுறையின் ஆணை மற்றும் பணி பற்றி எவ்வாறு தெளிவான மற்றும் நேர்த்தியான விளக்கங்களை வழங்குதல்
    - இந்தப் பொறிமுறை எவ்வாறு வேலை செய்யும், இந்த ஆணை எவ்வாறு விளங்கிக் கொள்ளப்படும் மற்றும் அதனுடைய தற்காலிக ஆணை என்ன
    - இலங்கையின் நிலைமையின் அதிகரித்த கண்காணிப்பிற்கு பொறுப்பான OHCHR குழுவிற்கும் பொறிமுறைக்கும் இடையிலான உறவினை இந்த பொறிமுறை எவ்வாறு நிர்வகிக்கும்
    - இலங்கை அரசாங்கத்துடனான ஐ நாவின் உறவில் ஏற்படும் தாக்கங்கள் என்ன

- பின்வருவன ஊடாக சிவில் சமூக அமைப்பினை இந்தப் பொறிமுறை உடனான ஈடுபாட்டுக்கு ஊக்குவித்தல்:
    - பொறிமுறையின் தலைவரால் நடாதப்பட்ட ஆரம்ப நேரடிச் சந்திப்புக்கள்
    - ஆய்வுப்பட்டறைகள் மற்றும் அறிக்கைகள் ஊடாக ஒழுங்காக புதிய தகவல்களை வழங்கல்
    - பிரதான உள்ளூர் மொழிகளைப் பேசும் தொடர்பு மையங்கள்
    - சிவில் சமூக அமைப்பின் உள்ளீட்டுடன் வரையப்பட்ட ஒரு பொதுவான நெறிமுறை ஊடாக ஈடுபாட்டை முறைப்படுத்தல் மற்றும் பிரதான உள்ளூர் மொழிகளில் மொழிபெயர்த்தல்
    - சிவில் சமூக அமைப்பின் கரிசனைகளை நிவர்த்தி செய்யும் குறிப்பிட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்
    - சேகரிக்கப்பட்ட ஆதாரங்களுக்கான பற்றுச்சீட்டுக்கள்.

    - எவ்வளவு காலத்திற்கு , எவ்வாறு ஆதாரங்கள் பேணப்படும் என்பதற்கான உறுதிப்படுத்தல் மற்றும் பொறிமுறையின் ஆணை மீளப்புதுப்பிக்கப்படாவிட்டால் அந்த ஆதாரத்திற்கு என்ன நடக்கும்
    - ஒரு நாள் கலப்பின நீதிமன்றம் என்று ஒன்று வந்தால் மிக முக்கிய வாக்குமூலம் அதனுடன் பகிர்ந்த கொள்ளப்படமுடியுமா என்பது பற்றி கலந்துரையாடல்? ஒவ்வொரு தடவையும் தகவல் பகிர்ந்து கொள்ளப்படும் போது பாதிக்கப்பட்டவரிகளிடமிருந்த புதிய சம்மதம் பெறப்படுமா? என்ன மொழியில் உடன்படிக்கைகள் எழுதப்படும்?
    - சாட்சிகளின் அடையாளங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படும் என கலந்துரையாடல்

- ஈடுபடுதல் பற்றி ஒரு அபாய மதிப்பீடு ஒன்றினை நடத்துதல் அத்துடன் இது சிவில் சமூக அமைப்புகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் அமைப்புகளும் இதனால் கருதுவது என்ன மற்றும் ஆராய்தல்:
    - ஆதாரங்களை திரட்டுவதற்கு என்ன நெறிமுறைகள் உருவாக்கப்படும்
    - புதிய ஆதாரம் தேவை என்பதை அந்தப் பொறிமுறை எவ்வாறு சுட்டிக்காட்டும்
    - காலப் பகுதிகள். சம்பவங்கள், குற்றங்கள் அத்துடன் ஆதாரத்தின் வகைகள் தொடர்பில் இந்தப் பொறிமுறை எவ்வாறு அதன் முன்னுரிமைகளை தீர்மானிக்கின்றது
    - வழக்கு கோவைகளை உருவாக்குவதற்கான ஒரு உத்தேசம் உள்ளதா என்பது பற்றி தெளிவுபடுத்தல்

- சேகரிக்கப்பட்ட ஆதாரத்தினை பெற்றுக் கொள்வதற்கான அனுமதியை யார் கேட்டமுடியும் என்பது பற்றிய நெறிமுறைகளை இந்தப் பொறிமுறை உருவாக்குமா அத்துடன் இவ்வாறான அனுமதிக்கான வரைமுறை என்னவாக இருக்கும்
- எதிர் கால வழக்குகள் குறித்து ஏனைய சட்ட அதிகாரத்திலுள்ள வழக்கறிஞர்களுடன் ஈடுபடுவதில் இந்த பொறிமுறை செயற்திறன் உள்ளதாக இருக்குமா?
- விசாரணை நுட்பங்கள் மற்றும் நலன் முரண்பாடு உருவாகாமல் தரநிலைகள் பற்றி ஆற்றல் கட்யெழுப்புதலை சிவில் சமூக அமைப்புக்கள் பெற்றுக் கொள்கின்றனவா என்பதை எவ்வாறு உறுதிப்படுத்தல் - இது தொடர்பில், சங்கிலிப் பாதுகாப்பு, டிஜிட்டல் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு பிரச்சினைகள் உட்பட நேர்த்தியான விசாரணைகளை உறுதிசெய்வதற்கு தேவயான தரநிலைகள் பற்றி சிவில் சமூக அமைப்பக்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளுக்கு ( நேரடியாகவோ அல்லது முன்றாம் தரப்பு ஒன்றின் ஊடாகவோ) இந்தப் பொறிமுறை பயிற்சி வழங்குமா. இது நாடு கடந்துவாழும் அமைப்புக்கள் மற்றும் வெளிநாடுகளிலள்ள அரச சார்பற்ற நிறுவனங்களையும் உள்ளடக்குகின்றதா?

**2. உறுப்பு நாடுகள்**

- விசாரணை செய்:
  - தற்போது நடைபெற்றுவரும் பகிரங்க அறிக்கைகள் வெளியிடுதல் மற்றும் ஆதரவாகப் பேசுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு உறுப்பு நாடுகளுடன் ஈடுபடவதற்கு OHCHR அதனுடைய மேம்பட்ட கண்காணிப்பு பணியை எவ்வாறு அதிகூடிய வினைத்திறனுடன் பயன்படுத்த முடியும்.
  - இன அழிப்பு மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்களில் தொடர்புபட்ட குற்றவாளிகள் மீது வழக்கு தொடுக்கும் எதிர்கால சுயாதீன நீதிமன்றங்களுக்கான ஆதரவைக் கட்டியெழுப்புவதற்கு உறுப்பு நாடுகளுடன் எவ்வாறு மிகவும் வினைத்திறனுடன் ஈடுபடமுடியும்
  - தவிர்க்கப்படும் அபாயத்தைக் குறைப்பதற்கும் உறுப்பு நாடுகள் மற்றும் இந்தப் பொறிமுறை உடனான ஈடுபாட்டின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்வதற்கு ஏனைய சிவில் சமூக அமைப்புக்களை ஒருங்கிணைக்க வேண்டுமா அத்துடன் எவ்வாறு ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல் ( உள்ளேயும் அத்துடன் இன மற்றும் ஏனைய அடையாளத்தை அடிப்படையாக கொண்ட குழுக்களுக்கு இடையில்)
  - எதிர்காலத்தில் கலப்பின நீதிமன்றம் அல்லது சர்வதேச தீர்ப்பாயத்தை ஏற்றுக் கொள்ளச் செய்வதற்கு இலங்கை அரசாங்கத்தின் மீது அரசியல் அழுத்தத்தைக் கொடுப்பதற்கு உறுப்பு நாடுகளுடன் எவ்வாறு மிகவும் வினைத்திறனுடன் ஈடுபட வேண்டும்.
  - கட்டாயப்படுத்தாமல் நன்கொடையாளியின் ஆதரவுக்கு ஊடாக சிவில் சமூக அமைப்பின் ஈடுபாட்டை எவ்வாறு ஊக்குவிக்கலாம் ( சிரியாவிற்கான சுயாதீன விசாரணைப் பொறிமுறை நன்கொடையாளிகளுடனும் பொறிமுறையுடனும் ஒரு மிகவும் சிறந்து உறவைக் கொண்டுள்ளது)

**3. அபாயத்தைக் குறைப்பதற்காக ஒன்றாக என்ன செய்யவேண்டும்:**

- தொடர்புபட்ட ஆபத்துக்களை தணிப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி சிவில் சமூக அமைப்புக்களும் இந்தப் பொறிமுறையும் தீர்மானிக்க வேண்டும்:
  - சிவில் சமூக அமைப்பு பணியாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு
  - பாதிக்கப்படக்கூடிய நிலையிலுள்ள பாதிக்கப்பட்டவர்கள் மேலும் உளவியல் தாக்கத்திற்குள்ளாகுதல்.
  - சிவில் சமூக அமைப்பக்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் யாதார்த்தத்திற்குப் புறம்பான எதிர்பார்ப்புக்கள்

**முடிவு**

இலங்கையில் பாரிய அக்கிர குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதி மற்றும் பொறப்புக்கூறலின் ஆரம்பத்தை உருவாக்குவதற்கான ஒரு முக்கியமாக சந்தர்ப்பத்தை இந்தப் பொறிமுறை குறிக்கின்றது. எவ்வாறாயினும் இந்த பொறிமுறையினை உருவாக்கும் செயல்முறையும் அத்துடன் அதனை ஆரம்பித்தலும் முக்கியமாக உள்ள அதேவேளையில் அது கணிசமான சிக்கல்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும் என்பது முக்கியமானதாகும். சிவில் சமூக அமைப்பகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பன இந்தப் பொறிமுறை எவ்வாறு இயங்கும் என்பது பற்றி தெளிவாக உள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

**முற்றும்**

## பிற்சேர்க்கை: ஐநா குழுக்களின் பட்டியல்

- மனித உரிமைகள் சபையானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை (ICCPR) நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்கின்றது அத்துடன் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைக்கான முதல் விருப்ப நெறிமுறைக்கான அரச தரப்புக்கள் தொடர்பான தனிப்பட்ட தொடர்பாடல்களை பெற்றுக் கொள்ளும்.
- பொருளாதார , சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான குழு (CESCR) ஆனது பொருளாதார , சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை (ICESCR) கடைப்பிடிக்கப்படுவதை கண்காணிக்கிறது அத்துடன் (ICESCR) இற்கான முதல் விருப்ப நெறிமுறைக்கான அரச தரப்புகள் தொடர்பான தனிப்பட்ட முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும் (2013 இல் நடைமுறைக்கு வந்தது)
- இனப் பாகுபாட்டை இல்லாதொழிப்பதற்கான சபை (CERD) எல்லா வகையான இனப்பாகுபாட்டையும் இல்லாதொழிப்பது பற்றிய சர்வதேச உடன்படிக்கையை (ICERD) நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கிறது. அத்துடன் ICERD இன் 14 ஆம் சரத்தின் கீழ் உரிய பிரகடனத்தை மேற்கொண்ட அரச தரப்புக்களுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்ளும்.
- பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை இல்லாதொழிப்பதற்கான குழு (CEDAW குழு) பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாரபட்சம் பற்றிய உடன்படிக்கைக்கு உட்பட்டு நடப்பதை கண்காணிக்கும் (CEDAW), அத்துடன் CEDAW இற்கான விருப்பு நெறிமுறைக்கான அரச தரப்புகள் தொடர்பான தனிப்பட்ட தொடர்பாடல்களைப் பெற்றுக் கொள்ளுதல்
- சித்திரவதைக்கு எதிரான குழு (CAT) சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான , மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவாக நடத்தப்படுவதற்கு ( சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கை) எதிரான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்கிறது அத்துடன் சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் 22 ஆவது சரத்தின் கீழ் உரிய பிரகடனத்தை மேற்கொண்ட அரச தரப்புக்களுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்.
- சித்திரவதையை தடுப்பதற்கான உபகுழு (SPT) இது சித்திரவதைக்கு எதிரான உடன்படிக்கையின் விருப்ப நெறிமுறைக்கிணங்க உருவாக்கப்பட்டது (OP-CAT) , தடுப்பு இடங்களுக்கு செல்கிறது அத்துடன் சித்திரவதை மற்றும் தவறாக நடாத்தப்படுவதை தடுப்பதற்கான சிறந்த நடைமுறைகள் பற்றி அரசுகள் மற்றும் தேசிய தடுப்பு பொறிமுறைக்கும் ஆலோசனை வழங்குகிறது.
- சிறுவர் உரிமைக்கான குழு (CRC) ஆனது சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை மற்றும் அதனுடைய இரண்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு நடப்பதைக் கண்காணிக்கும் . ஏப்பிரல் 2014 இன் ஆரம்பத்தில்,தொடர்பாடல்கள் நடைமுறை பற்றிய மூன்றாவது விருப்பு நெறிமுறையினை ஏற்றுக்கொண்ட அரச தரப்புகளுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடுகளை ஏற்றுக்கொள்ளும்.
- புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கான குழு (CMW) அனைத்து புலம்பெயர் பணியாளர்களதும் அவர்களது குடும்ப உறுப்பினர்களதும் உரிமைகளைப் பாதுகாப்பது பற்றிய சர்வதேச உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்கிறது (ICMW). ஒரு தனிப்பட்ட நபர் முறைப்பாடுகள் பொறிமுறை இன்னும் முடிவாகாமல் உள்ளது அத்துடன் 10 அரச தரப்புக்கள் CMW இன் 77 சரத்திற்கிணங்க உரிய பிரகடனத்தை மேற்கொள்ளும் போது அது செயற்பட ஆரம்பிக்கும்.
- இயலாமை உள்ள நபர்களின் உரிமைக்கான குழு (CRPD) இயலாமையுடன் இருக்கும் நபர்களின் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைக்கு உடன்பட்டு நடப்பதைக் கண்காணிக்கிறது (ICRPD) அத்துடன் இந்த உடன்படிக்கைக்கான விருப்பு நெறிமுறைக்கான அரச தரப்புகளுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்கிறது.
- வலிந்து காணாமல் போனவர்களுக்கான குழு (CED) வலிந்து காணாமல் போதல்களிலிருந்து அனைவரையும் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுவதை கண்காணிக்கிறது (ICPPED) அத்துடன் உடன்படிக்கயின் 31 ஆம் சரத்திற்கிணங்க சபையினுடைய திறனை ஏற்றுக்கொண்டுள்ள அரச தரப்புக்களுக்கு எதிரான தனிப்பட்ட முறைப்பாடுகளைப் பரிசீலிக்கும்.